[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 5 பிற்பகல் 12—25

இங்கே மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர் அவர்கள் வெளியூரில் இருக்கின்ற காரணத்தினால், அவரை நேரில் சந்திக்க இயலாததால், திரு. டி.ஆர். பாலு அவர்கள், அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்கள். அவருடன் பேசியபோது, "தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் அனுப்பியிருக்கக்கூடிய கடிதத்திற்கு நிச்சயமாக நாங்கள் மதிப்பளிப்போம்; கவலைப்பட வேண்டாம்" என்ற ஓர் உத்தரவாதத்தை (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அமைச்சர் சொன்னதாக ஒரு செய்தியை திரு. டி.ஆர். பாலு அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, நிச்சயமாகச் சொல்கிறேன்; முதலமைச்சராக மட்டுமல்ல; நானும் டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனவே, இதிலே உறுதியாக நான் இருப்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களெல்லாம் எப்படி உறுதியாக இருக்கிறீர்களோ, அதைவிட அதிகமாக, அந்த அளவிற்கு நானும் உறுதியாக இருப்பேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், அதற்கு நிச்சயமாக நம்முடைய தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்காது; அளிக்காது; அளிக்காது என்பதைச் சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### திண்டிவனம்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. ச. சிவகுமார், திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் மற்றும் திரு. இரா. அருள் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

***திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்—கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்த

2023 ஏப்ரல் 5] [திரு. ச. சிவகுமார்]

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை, உறுப்பினர்களின் மேசைகளிலுள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**அறிக்கை**

திண்டிவனம் (கி.மீ. 37/600) முதல் கிருஷ்ணகிரி (கி.மீ. 219/782) வரையிலான தேசிய நெடுஞ்சாலை எண் 66, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தைச் சார்ந்ததாகும். இச்சாலையில் 182.182 கி.மீ. தூரத்திற்கு இருவழிச் சாலையாக அமைக்கும் பணிக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் 4–11–2019–ல் தொடங்கப்பட்டன.

கோவிட்–19 பெருந்தொற்று நோயின் முதல் அலை மற்றும் இரண்டாவது அலை அதன் விளைவுகள், நிவார் மற்றும் புரேவி சூறாவளிகளால் டிசம்பர் 2020 மற்றும் ஜூலை 2021–ல் மிக கனமழை மற்றும் இச்சாலைப் பகுதியில் சாலைப் பணிக்கான மண் எடுக்கும் இடங்கள் மழைநீரால் சூழப்பட்டதால் இப்பணி தாமதமானது. தற்பொழுது, 182.182 கி.மீ. நீளமுள்ள சாலையில் 172.266 கி.மீ. (95%) பணி நிறைவு பெற்றுள்ளது. மேலும் இத்திட்டம் ஜூன் 2023–க்குள் முடிக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

**திரு. ச. சிவகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். போதிய தகவல்கள் இல்லை. திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை என்பது, திருவண்ணாமலை, செஞ்சி, செங்கம், ஊத்தங்கரை வழியாக கிருஷ்ணகிரி வரை 182 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலையாகும். Multi

[திரு. ச. சிவகுமார்] [2023 ஏப்ரல் 5

road. அதாவது, இருவழிச் சாலையாக 7 மீட்டரிலிருந்து 10.5 மீட்டராக அகலப்படுத்தி, விரிவாக்கம் செய்யும் திட்டம் கடந்த 2010 ஆம் ஆண்டு சாலை அமைக்கும் பணி 610 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, ஒப்பந்தம் வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, 2012 மே மாதம் தொடங்கி, 2014 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டுமென்று தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதில், 2 பெரிய பாலங்கள், 16 சிறிய பாலங்கள், 366 குறுகிய பாலங்கள், 2 இரயில்வே மேம்பாலங்கள், திண்டிவனம், கிருஷ்ணகிரி, செஞ்சி, ஊத்தங்கரை உள்ளிட்ட ஒன்பது இடங்களில், 43.42 மீட்டர் நீளத்திற்குப் புறவழிச் சாலை ஆகியன அமைக்கப்பட வேண்டும். 2016 வரை 52 சதவிகிதப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்த நிலையில், மீதமுள்ள பணிகளை அந்தத் தனியார் நிறுவனத்தால் தொடர முடியவில்லை. இதனால் சாலைகள் படுமோசமான நிலையில் இருக்கின்றன. அதற்கான பணிகளை விரைந்து முடிக்கக் கோரி, செஞ்சி மற்றும் செங்கம் நீதிமன்றங்களில் பொதுநல வழக்கு ஒன்று தொடரப்பட்டது. இதுசம்பந்தமாக எங்களுடைய கட்சியின் நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களும் 16 இடங்களில் போராட்டங்களை நடத்தினார்கள். அந்தத் தேசிய நெடுஞ்சாலை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் வைத்துள்ள அந்த நான்கு பேப்பர்களையும் வாசித்தால் நேரம் தாங்காது. (குறுக்கீடு)

**திரு. ச. சிவகுமார்:** அந்தச் சாலைப் பணிகளை எடுத்து கிட்டத்தட்ட 13 வருடங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. ச. சிவகுமார்:** கிட்டத்தட்ட 13 வருடங்கள் ஆகின்றன. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தொடங்கப்பட்டது. அப்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 5] [திரு. துரைமுருகன்]

அதிலிருந்து ஏதாவது அவருக்குத் தெரியவில்லையென்றால், கேள்வி கேட்கலாம். ஏற்கெனவே எழுதி வைத்திருப்பதை இங்கு கொண்டுவந்து மறுபடியும் 5 பக்கங்களுக்கு, 10 பக்கங்களுக்கு படிப்பது என்பது, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் முறையல்ல. இதை நீங்கள் அனுமதித்தீர்கள் என்றால், அது சரியுமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ச. சிவகுமார்:** கிட்டத்தட்ட 3 சுங்கச்சாவடிகள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சாலைப் பணிகள் 52 சதவிகிதம் முடிந்து 9 ஆண்டுகள் ஆகின்றன. குறிப்பாக, சாலைகள் அமைத்த பின்னர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, அந்த 3 சுங்கச்சாவடிகளை அமைக்கக் கூடாது. எனவே, சாலைப் பணிகளை விரைந்து முடித்து, திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலை என்பது தேசிய நெடுஞ்சாலை, அதாவது, தேசிய நெடுஞ்சாலை எண் 66 ஆகும். 16–4–2012–ல், 182 கிலோ மீட்டர் உள்ள இந்தச் சாலையை 624 கோடி ரூபாய் அளவுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, அதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தொடர்ந்து 52 சதவிகிதப் பணிகள்தான் 2016 வரைக்கும் நடைபெற்றன. திண்டிவனம்–கிருஷ்ணகிரி சாலையில்தான் திருவண்ணாமலையும் இருக்கின்றது. அந்தச் சாலையில்தான் நானும் பயணிக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக எதிர்க்கட்சியில் நான் இருந்தபோது, அப்போது அரசினுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவந்தேன்.

பிற்பகல் 12–30

ஒப்பந்தம் போடப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, அந்தச் சாலைப் பணிகள் 2016 ஆம் ஆண்டு வரைக்கும் நிறைவடையவில்லை என்று சட்டமன்றத்தில் நான் கவன

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 5

ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்ததோடு மட்டுமல்ல, ஒன்றிய அரசாங்கத்தினுடைய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. நிதின் கட்கரி அவர்களும் அப்போது இதே துறையின் அமைச்சராகத்தான் இருந்தார்கள். அந்தச் சாலைப் பணிகள் நிலுவையில் இருக்கின்றன உடனே நிறைவேற்றித் தர வேண்டுமென்று அவருக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அவரும் எனக்கு பதில் கடிதம் எழுதியிருந்தார்கள்; அதில் மாநில அரசாங்கம் முழு ஒத்துழைப்பு கொடுக்காத காரணத்தால்தான் இந்தப் பணி தாமதமாகின்றது என்று அதில் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த விவரத்தை, அப்போதே எதிர்க்கட்சியில் இருந்தபோது இதே மன்றத்தில் படித்துக் காண்பித்து ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டேன். அதற்குப் பின்னாலும்கூட, அந்தப் பணிகள் வேகமாக நடைபெறவில்லை. தொடர்ந்து, ஒன்றிய அரசாங்கம் ஏற்கெனவே எடுத்திருந்த டான்சாய் என்ற ஒப்பந்ததாரரை இரத்து செய்துவிட்டு, 14–11–2019 அன்று மீண்டும் ஓர் ஒப்பந்தத்தைக் கோரியது. அந்த ஒப்பந்தத்தை தமிழ்நாட்டைச் சார்ந்த எஸ்.வி.கே. & கோ என்ற ஒப்பந்ததாரர் எடுத்தார்கள். 2019 ஆம் ஆண்டு டெண்டர் எடுத்தும்கூட அதற்குப் பின்னாலும் மிகவும் காலதாமதமாக அந்தப் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

கழக ஆட்சி அமைந்தவுடன், ஏற்கெனவே இதுகுறித்து நானே கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன், ஒன்றிய அமைச்சர் அவர்களின் கடிதத்தை இங்கே படித்து காண்பித்தேன் என்பதையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு, விரைந்து அந்தச் சாலைப் பணிகள் நடைபெற வேண்டுமென்கிற அடிப்படையில் மீண்டும் ஒன்றிய அரசின் அமைச்சர் திரு. நிதின் கட்கரியை சந்தித்து, ஒப்பந்ததாரர் அந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் விளைவாக இன்றைக்கு ஏறத்தாழ 95 சதவிகிதப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலும், குறிப்பாக, சத்தியமங்கலம், செங்கம், சாம்பல்பட்டி, செஞ்சி ஆகிய நான்கு இடங்களில் புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரயில்வே மேம்பாலமும், சிறு பாலங்களும் கட்டுகின்ற பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளில், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை நானும் அழைத்துப் பேசினேன். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களும் என்னைத் தொடர்ந்து

*2023 ஏப்ரல் 5]* [திரு. எ.வ. வேலு]

*பலமுறை வலியுறுத்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது ஒப்பந்ததாரரையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசியதன் அடிப்படையில், ஆகஸ்டு 2023–க்குள் அந்தப் பணிகள் முழுவதுமாக முடிக்கப்படும் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவகுமார் அவர்கள் எதிர்பார்த்ததைப்போல, நீங்களும், நானும் சேர்ந்து அந்தச் சாலையில் பயணிக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்படும்.*

## 4. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

**(இ) கோரிக்கை எண் 7–மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

**(ஈ) கோரிக்கை எண் 8–பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)**

– – –

### (அ) கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*